ISSN:2582-9599



# நெடுநல்வாடையில் கட்டடக்கலையும் பழந்தமிழர் பண்பாடும்

**முனைவர் இரா. தனலெட்சுமி**
**உதவிப் பேராசிரியர், இலக்கியத்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10.**

**38**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் தொன்மையான காலமாகும். வரலாற்று ஒளி படரும் எல்லைக்குள் சங்க காலம் இருப்பதை ஆய்வாளர் பலர் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழ் இலக்கிய மரபுகளில் சங்க இலக்கியங்கள் வரலாற்றுக் கருவூலம் என்பது திண்ணம். சங்க கால மக்களின் பண்பாடு, நாகரீகம், வாழ்க்கை, சமூக ஒழுக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை இலக்கியத்தில் வெளிப்படுவதுண்டு; சங்க காலத்தில் காதலும் வீரமும் மையப் பொருண்மையாக காணப்பட்டன.

சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது. ஏராளமான பாடல்கள் ஓலைச்சுவடிகளிலிருந்து அழிந்து போக எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள், புலவர்களின் துணையோடு செயல்பட்டனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவையே எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்றும் பத்து பெரும்பாடல்கள் பத்துப்பாட்டு என்றும் பெயர் பெற்றன. இத்தகைய சிறப்பு பொருந்தியப் பத்துப்பாட்டில் காதல் பற்றியும் காதலன் போருக்காகச் சென்று தங்கி இருக்கக்கூடிய அந்த பாசறையின் வர்ணனையும் பழந்தமிழர்களின் பல்வகை கலைநுணுக்கங்களைப் பற்றியும் திறம்பட எடுத்தியம்புகின்ற ஒரு சிறப்பு பொருந்திய நூலாக பத்துப்பாட்டில் நெடுநல்வாடை அமைந்துள்ளது. நெடுநல்வாடையில் எடுத்தாளப்பட்டுள்ள பழங்கால கட்டடக்கலை பற்றியும் பழந்தமிழருடைய பண்பாடுகள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது

**கலைச்சொற்கள்**

சங்க இலக்கியம், வரலாறு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, காதல், வீரம், போர், கட்டடம், மக்கள், தெய்வம், அரண்மனை, போர்க்களம், பசுக்கள், நெல், மலர்கள்.

**முன்னுரை**

பத்துப்பாட்டு என்பது சங்கச் சான்றோர்கள் என்மரால் இயற்றப்பட்டுக் கடைச்சங்கத்து இறுதி காலத்தில் தொகுக்கப்பெற்ற பத்துப்பாடல்களைத் தன்னகத்துக் கொண்ட ஒரு நூலாகும். இது பண்டைத் தமிழ் மக்களுடைய வரலாறுகளையும், பழக்கவழக்கங்களையும் நம்மோர்க்கு நன்குணர்த்தும் பெருமை உடையது. மறைந்த பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை அவர்கள் தம் மனோன்மணியம் என்ற நாடகத்தில்,

**“பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே”**

என்ற வரிகளில் வடமொழி இலக்கியங்களைவிடத் தமிழ் இலக்கியங்கள் சிறந்தவையென எடுத்தியம்புவது குறிப்பிடத்தக்கது. பத்துப்பாட்டுள் ஆற்றுப்படைகளாகவுள்ள திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, என்ற ஆறு பாட்டுகளும் புறத்திணை பற்றியன. முல்லைப்பாட்டு, குறிஞ்சித்திணை, பட்டினப்பாலை என்ற மூன்று பாட்டுகளும் அகத்திணை பற்றியன என்பதை அவற்றின் பெயர்கள் நமக்கு உணர்த்துகின்றன. நெடுநல்வாடை என்ற ஒரு பாட்டு மட்டும் திணை ஆராய்ச்சிக்கு உரியதாகின்றது.

**நெடுநல்வாடை**

பிரிவால் வருந்திய தலைவிக்கு வாடைக்காற்று தலைவனின் பிரிவை நெடுமையாக்கி வருந்தத்தக்க நெடுவாடையாக இருந்தது. இப்பாட்டு சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர் (தொல்.பொ.54) அகப்பொருளாகவும், வேம்புதலையாத்த நோன்கா ழெஃகம் (நெ.வா:176) என அடையாளப் பூக்கூறினமையின் அகமாகாதாயிற்று என்பார் உரையாசிரியர். பிற்காலத்தில் இதற்கு மறுப்புரைக்கும் பல உரைகள் எழுந்தன. வினைமேற் சென்ற தலைவனும் பிறரும் தலைவியின் பிரிவை நினையாமல் ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ என்னும் கொள்கையினராக இருந்தனர். எனவே, வடக்கிருந்து வரும் வாடைக்காற்று அவர் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை தரும் வாடையாக இருந்ததால் **நல்வாடை**யாக இருந்தது. தலைவன் தலைவி இருவர்பாலும் செய்யப்பட்ட வாடையின் இருவேறுபட்ட தன்மைகளையும் ஒழுங்குபடுத்தி நெடுநல்வாடை என நூலுக்குப் பெயரிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. வாடை துன்பத்தைக் குறிப்பது; நல்ல அன்பை உணர்த்துவது. “நெடு” என்பது அழியாமையைத் தெரிவிப்பது. இதற்கண் அழியாது நீளும் நல்வாடை என்று கூறுவார் திரு.வி. க.

**நெடுநல்வாடையின் மரபுக் குறிப்பு**

முல்லைப்பாட்டில் கார்காலத்து மழையின் பின்னணி காட்டப்படுள்ளது. நெடுநல்வாடையில் கூதிர்காலத்து மழை பின்னணி விவரிக்கப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களில் குறிப்பிட்ட ஒருவரின் பெயர் சுட்டிக்காட்டப்படக்கூடாது என்பது இலக்கிய மரபு. இதற்கு,

**“மக்கள் நுதலிய அகனைந் திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்” (தொல். பொருள்.54)**

இதற்கு மு.வ. அவர்கள் கூறும் கருத்து வேலுக்கு வேப்பிலை சூட்டியிருப்பதாக ஒரு சிறு குறிப்பு நூலில் உள்ளது. ஆகையால் இன்னக்குடி என்று புலப்பட்டு விடுவதால் இது அகப்பாட்டு ஆகாது என்று உரையாசிரியரின் கருத்து. வேம்பு என்ற அந்த ஒரு சொல் இல்லையானால் அது முழுவதும் கற்பனையான காதற்பாட்டு என எண்ணத் தடை இருக்காது. இலக்கிய மரபு அந்த அளவிற்கு வளர்ந்திருந்த காலம் அது என்கிறார் மு.வ. தலையாலங்கானத்து செறுவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மண்ணாசை மீதூர படையெடுத்துச் சென்றிருந்ததை நெடுநல்வாடைக் காட்டுகின்றது. மண்ணாசை காரணமாகப் போரிடுவது வஞ்சித்திணை ஆகும். புறத்திணையாகிய வஞ்சித்திணை அகத்திணையாகிய முல்லைத்திணைக்குப் புறனாக வரும். இதை

**“வஞ்சிதானே முல்லையது புறனே” (தொல்.பொருள்.64)**

என்று தொல்காப்பியம் தெளிவுப்படுத்துகிறது. எனவே நெடுநல்வாடை முல்லைத்திணையும் வஞ்சித்திணையுமாக அகமும் புறமும் கலந்த நூல் என்பது தெளிவாகிறது.

**நெடுநல்வாடையின் சிறப்பு**

நீண்ட நல்ல வாடைக்காலத்தில் அரசனைப் பிரிந்துள்ள தலைவி எவ்வாறு மனத்துயரோடு வாழ்கிறாள் என்பதைக் கூறுவது நெடுநல்வாடை. பத்துப்பாட்டில் காதல் பற்றி 188 அடிகளால் ஆகிய ஒரு நெடும்பாட்டு. தலைவன் போர்க்களத்துப் பாசறையில் இருக்கின்றான்; தலைவி அவனுடைய பிரிவால் துயருற்று அரண்மனையில் வாடுகிறாள். பாட்டின் முழு அமைப்பும் ஒரு வழிபாடாக தெய்வத்திடம் வேண்டுகோளாக உள்ளது. தலைவியின் துயரைத் தீர்ப்பதற்கு யாராலும் முடியவில்லை; அரண்மனை மகளிர் கொற்றவையை வேண்டிக்கொள்கிறார்கள். போர்க்களத்தில் பாசறையில் தன் கடமையே பெரிதாகக் கொண்டு அதிலேயே மூழ்கியுள்ள வீரப்பெருமானாகிய தலைவன் போரில் விரைவில் வெற்றிபெற்றுத் திரும்புமாறு அருளவேண்டும் என்று போர்த்தெய்வமாகிய கொற்றவையை வேண்டுகிறார்கள். இதுவே பாட்டின் மையப்பகுதியாக அமைகிறது. இதைச்சுற்றி வருணனைகள் அதிகமாக உள்ளன.

**"வையகம் பனிப்ப வலன்ஏர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென" (நெ.வா.1 - 2)**

மேகங்கள் வலப்பக்கமாக எழுந்து மழையில் பொழிந்தன. மிகுதியான மழையால் வாடை மிகுதியாக இருந்தது. இடையர் தாம் மேய்க்கும் ஆநிரைகளை வேற்றுப்புலத்திற்கு ஓட்டிச் சென்று மேயவிட்டனர். கொக்குகளும், நாரைகளும் ஈரமணலில் இருந்துகொண்டு எதிரே வந்த கயல்மீன்களைக் கொத்தித்தின்றன. இதை,

**"புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்**
**பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்**
**பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி**
**இருங்களி பரந்த ஈர வெண்மணற்**
**செவ்வரி தாரையோ டெவ் வாயுங் கவரக்**
**கயலறல் எதிர்க் கடும்புனல் சாஅய்" (நெ.வா.13 - 18)**

என்ற பாடலடிகள் விளக்குகிறது.

**அணிகலன்கள்**

ஒரு சமுதாயத்தின் நாகரீகத்தையும், வளர்ச்சியையும் வெளிப்படுத்துவன அணிகலன்கள். தொடக்க காலத்தில் இயற்கைப் பொருள்களாகிய தாவரங்களையும், செடிக்கொடிகளையும், மலர்களையும் ஆபரணம் போன்று அணிந்துக் கொண்டார். காதில் தளிரை அணிந்து அதை குழை என்று கூறினர். சுரையுள் சில்காழ், பல்காழ் என விதைகளை அணிந்தனர். பின்னர் காழ் என்ற சொல்லானது மணிகளைக் குறித்த சொல்லாயின.

பழங்காலத்தில் நகைகள் என்று கூறுவதை அணி, பூண், இழை, கலம் என்ற பலபெயர்களால் அழைத்தனர். அணிதல் என்பது சட்டை அணிதல், ஆடை அணிதல் போன்று கழற்றி மறுபடியும்

போட்டுக்கொள்ளக் கூடிய ஆபரணம். பூண் என்பது செறிவாக அமைகின்ற ஆபரணம். அதாவது உலக்கைக்குப் பூண் போடுவது உண்டு. மரங்களை இழைத்துச் செய்வது இழை எனப்பட்டது. அதனால்தான் அணி இழை எனவும், ஆபரணம் ஒளியோடு இருந்தால் ஒளியிழை எனவும், செம்பொன்னாலும் செம்மணிகளாலும் ஆகிய ஆபரணத்தைச் சேயிழை எனவும் பசும்பொன்னாலும் பசுமையான மணிகளாலும் ஆன ஆபரணத்தைப் பாசிழை எனவும் அழைத்தனர்.

**"ஒண்குழை திகழும் ஒளிகெழு திருமுகம்"** **(மதுரை. 448)**

என்ற பாடலடியில் மதுரை நகரத்து செல்வமகளிர் ஒளிபொருந்திய காதணியை அணிந்திருந்தனர் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

நெடுநல்வாடையில் பாண்டிய நாட்டு மகளிர் மென்மையான பொலிவுடைய காதணியை அணிந்திருந்தனர் என்பதை,

**"பூங்குழைங்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்"** **(நெ.வா. 38)**

என்ற பாடலடி விளக்குகிறது.

பொருநராற்றுப்படையில் கரிகாற்வளவன் பாடினிக்கு முத்துக்களோடு பொருந்திய பொன்னாளாகிய மாலையைக் கொடுத்தான் என்பதை,

**"நூலின் வலவா நுணங்கு அரில் மாலை**
**வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய"** **(பொருநர். 161-162)**

என்ற வரிகள் புலப்படுத்துகின்றது.

பாண்டிமாதேவி முத்தால் செய்யப்பெற்ற மார்புக்கச்சினை அணிந்திருந்தார் என்பதை,

**"ஆரம் தாங்கிய அலர்சிலை ஆகத்து"** **(நெ.வா. 136)**

என்ற நெடுநல்வாடைப் பாடல் வரி விளக்குகிறது.

**தொழில்கள்**

உழவும் வாணிகமும் உலகத் தொழில்களில் மிகுதியாகச் சொல்லத்தகுவன. உலகத்திற்கு மிக அடிப்படையானது உழவுத்தொழில். ஒவ்வொரு நில மக்களும் தங்களுக்குரிய வீடுகளை அமைக்கும் தொழிலையும் செய்து வந்தார்கள். மண்சுவர் எழுப்புதல், வைக்கோல் முதலியவற்றைக் கொண்டு கூரையமைத்தல், மண்ணைக்கொண்டுச் செங்கல் செய்து உலர்த்துதல், உலர்ந்தவற்றைச் சூளையிலிட்டுச் சுடுதல் முதலிய தொழில்களைச் செய்தனர். ஒவ்வொரு நிலத்திலும் பறை, துடி, முழவு, பம்பை முதலியக் கருவிகளைச் செய்யும் தொழிலும் நடைபெற்றது.

**"பரு இரும்பு பிணித்துச் செல்வரக்கு உரீஇத்**
**துணைமாண் கதவம் பொருந்தி இணைமாண்டு**
**நாளொடு பெயரிய கோளமை அழுமரத்துப்**
**போதுஅவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்து"** **(நெ.வா. 80-83)**

பழுத்த இரும்பாலே கட்டிச் சாதிலிங்கத்தைப் பூசி இரட்டைக்கதவுகளை அமைத்திருந்தனர். மேல் விதானத்தில் குவளைப் பூக்காதம் பெண் யானைகளுமாகிய சித்திரங்களை வரைந்திருந்தனர். கைத்தொழிலில் வல்ல தச்சன் இவற்றை செய்திருந்தான் என்றும்,

**"காடிகொண்ட கழுவுறு கலிங்கத்து**

**தோடுஅலை தூமடி விரிந்த சேக்கை"** **(நெ.வா. 134-135)**

பாண்டிமாதேவியின் கட்டிலின் மீது கஞ்சியிட்டு சலவை செய்யப்பட்ட துகில் விரிக்கப்பட்டிருந்தது என்பதனால் சலவைத் தொழில் நடைபெற்றது என்பதையும் தெளிவாக அறியமுடிகிறது.

**கட்டடக்கலை**

சங்க இலக்கியங்களில் கட்டடக்கலைப் பற்றி செய்திகள் பல்வேறு இடங்களில் பொதிந்துக்காணப்படுகின்றது. திருமுருகாற்றுப்படையில்

**"கைபுனைந்து இயற்றாக் கவின் பெறுவனப்பின்"** **(திருமுருகு - 17)**

என இயற்கையை வருணித்த நக்கீரர் பத்துப்பாட்டில் தம்முடைய மற்றொரு பாட்டாகிய நெடுநல்வாடையில் செயற்கை கலையாகிய கட்டடக்கலைப் பற்றி எழிலுறக் குறிப்பிடுகிறார். அரண்மனை வகுத்துக் கட்டப்பட்ட முறையை அது கால்கோல் செய்யப்பட்ட நாள் முதலாக எடுத்துரைக்கிறார்.

அரண்மனை வாயில், முற்றம், அந்தப்புரத்தின் அமைப்பு, அரசி படுத்திருக்கும் வட்டக்கட்டில், அதன் விதானம், படுக்கையின் அமைப்பு யாவும் சிற்ப உத்தித்திறனோடு புனையப்பட்டுள்ளது. கட்டிற்காலில் உருண்டு திரண்டிருக்கும் குடம் போன்ற உறுப்பை,

**"தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்பப்**

**புடைதிரண் டிருந்த குடத்த இடைதிரண்டு"** **(நெ.வா.120-121)**

என்று நுட்பமாக விளக்குகிறார். அசையும் நடையினை உடைய மகளிர் என்பதால் கருக்கொண்ட மகளிர் என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருக்கும் அழகிலேயே சிற்ப நுட்பம் உள்ளதாகிறது. பாண்டியனுக்கு முன்னதாகப் பாசறைக்கண் நள்ளிரவில் தீவட்டி மடித்துச் செல்லுகையில் வாடைக்காற்று வீசுவதால் அதன் சுடர் தெற்கே சாய்ந்து எரிவதையும் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

**"வடந்தைத் தண்வளி ஏறிதொறும் நுடங்கித்**

**தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய நன்பல்**

**பாண்டில் விளக்கில் பரூ உச்சுடர் அழல"** **(நெ.வா.173-175)**

இக்காட்சியும் சிற்பத்தினை நுட்பமாகக் குறிப்பிடுவதாக அமைகிறது.

**கட்டடச் சிறப்பு**

நெடுநல்வாடை பகுதியால் தெரியவரும் கட்டடக்கலை தொடர்பான பழக்கவழக்கங்களும் பண்பாடுகளும் கூர்ந்து கவனிக்கத்தக்கவை ஆகும். கதவு முகப்பில் குவளைப்பூ ஏந்திய இரு பெண் யானைகளிடையே திருமகள் தோற்றம் அமைப்பது மங்கலமாகக் கருதப்பட்டது. நிலைப்பாட்டில் வெண்நிறகடுகு அரைத்து நெய்கலந்து அப்புகிற பழக்கம் மரபாக இருந்தது. ஆணிகளும் பட்டங்களுமாகிய பெரிய இரும்புகளாலே கட்டப்பட்டுச் செவ்வரக்கு வழித்துத் தாழ்பாள் பொருந்திய இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச் சேர்த்து செய்த தச்சனின் கைவண்ணத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**"திருநிலை பெற்ற தீதுதிர் சிறப்பின்**

தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து” (நெ.வா. 89-90)

திருநிலைப்படியில் திருமகள் அமைப்பு தவிர அழகிய மனையின் முன்னிடத்தில் மணல் பரப்பும் வழக்கமும் இருந்தது. அத்தகைய மணல் முற்றத்தில் அழகிய நிறத்தையுடைய அன்னப்பறவைகள் இருக்கும் என்பதையும், அரசன் கோயிலில் சிறப்பான நிலா முற்றம் உண்டு என்பதையும் கூட நெடுநல்வாடையிலிருந்து அறியமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழரின் பண்பாட்டை உணர்த்தும் கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பத்துப்பாட்டு என்ற தொகுப்பில் நக்கீரரால் பாடப்பட்ட நெடுநல்வாடையில் அகச்செய்திகளைக் கொண்டிருப்பினும் பாண்டிய மன்னனின் வேம்புமாலை பற்றி குறிப்பிட்டுள்ளதால் இது புறமாகவும் கொள்ளப்படுகிறது. தமிழரின் அகக்கோட்பாட்டு முறைமையின் கட்டமைப்பினை அறிய இவ்விலக்கியம் மிகச்சிறந்த சான்றாக உள்ளது. நெடுநல்வாடை பாடல்கள் மக்களின் வாழ்வியலைக் காட்டுவதோடு அவர்களது அடிப்படைத்தொழில்களான ஆடுமாடு மேய்த்தல், வேளாண்மை செய்தல் ஆகியவற்றையும் சமூகமாகக் கூடி வாழ்ந்த சங்ககால மக்களின் உணவு, உடை, உறையுள், தொழில், விளையாட்டு, வீரம், மொழி போன்றவற்றை பண்பாட்டு நிலைகளன்களாக நெடுநல்வாடை பாடல்கள் எடுத்துரைக்கின்றன. தமிழகத்தில் பலவகையான கலை நுணுக்கங்களை நெடுநல்வாடை நமக்குக்காட்டுகிறது. அரண்மனை வாயில்கள், அரசியின் அறை, அரண்மனை முன்றில் போன்றவற்றின் வாயிலாக பழந்தமிழரின் கலைநுட்பத்தை அறிந்து கொள்ளமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. மா. இராசமாணிக்கனார் , பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், புது தில்லி, 110001.
2. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600108
3. முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு
4. நைசி. கரிகாலன், பத்துப்பாட்டு ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600098.
5. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள் நூற்களஞ்சியம் தொகுதி – 1, தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை – 600005.
6. முனைவர் ச. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு – 613204.